**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**STC No.30-2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Selvaraj | Prosecution | pw4 Lw4 chief |
| Father Name | Manickam | Defence | |
| Village | Maanthoppu st, Pudhuthurai | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 59 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11**.06.2024** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளையும் அ. சா.1 முதல் 3 வரையிலானவர்களையும் எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

. கடந்த 17.11.2022 ம் தேதி காலை 9.00 மணியளவில் அ.சா.1 க்கும் எதிர் வீட்டில் வசிப்பவருக்கும் இடையே இடப்பிரச்சனை பற்றி பேசிக்கொண்டிருந்தபோது எதிரி லெனின்தாஸ் எப்படி எனது பெயரை நீ சொல்லலாம் என்று அ.சா.1 டம் கேட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி லெனின்தாஸ் அ.சா.1 வயிற்றில் செங்கல்லால் அடித்தார் என்றால் சரியல்ல. அ.சா.2 ஐயும் செங்கல்லால் அடித்தார் என்றால் சரியல்ல. எதிரி லெனின்தாஸின் அம்மா சுசீலா அ..சா.1 ஐ செருப்பால் அடித்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. லெனின் தாஸ் மனைவி சரண்யா அ.சா.1 ஐ தலை முடியை பிடித்து இழுத்து அடித்தார் என்றால் சரியல்ல. என் மகன் ஜானகி ராமன் அ.சா.1, 2 ஐ ஆட்டோவில் சீர்காழி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்த்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சம்பவத்தை கேள்விபட்டதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**STC No.30-2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Rameshraja | Prosecution | pw5 Lw5 chief |
| Father Name | Ganesan | Defence | |
| Village | Maanthoppu st, Pudhuthurai | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 41 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11**.06.2024** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரிகளையும். அ.சா1 முதல் 4 வரையிலானவர்களையும் எனக்கு தெரியும். ராஜாராம் மகன் முருகானந்தத்தையும் தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கவும் இல்லை. நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகளில் என்னுடையது எதுவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 22.11.2022-ம் தேதி பகல் 12.00 மணிக்கு நானும் ராஜாராம் மகன் முருகானந்தம் என்பவரும் புதுத்துறை மாந்தோப்புத் தெரு வாதியின் வீட்டு முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தபோது திருவெண்காடு போலிசார் வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த வரைப்படம் மற்றும் பார்வை மகசரில் சாட்சியாக நானும் ராஜாராம் மகன் முருகானந்தம் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**STC No.30-2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Muruganandam | Prosecution | pw6 Lw6 chief |
| Father Name | Rajaram | Defence | |
| Village | | Taluk | Sirkali |
| Calling | Vadapathi , puthuthurai | Religion | |
| Age | 51 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11**.06.2024** சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து எலக்ட்ரிகல் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு எதிரிகளையும். அ.சா1 முதல் 4 வரையிலானவர்களையும் எனக்கு தெரியும். கணேசன் மகன் ரமேஷ்ராஜாவை தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கவும் இல்லை. நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகளில் என்னுடையது எதுவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 22.11.2022-ம் தேதி பகல் 12.00 மணிக்கு நானும் கணேசன் மகன் ரமேஷ்ராஜா என்பவரும் புதுத்துறை மாந்தோப்புத் தெரு வாதியின் வீட்டு முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தபோது திருவெண்காடு போலிசார் வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த வரைப்படம் மற்றும் பார்வை மகசரில் சாட்சியாக நானும் கணேசன் மகன் ரமேஷ்ராஜா என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**